DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**CP** 62/2025

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | RW1 |
| NAME | I. பிராங்களின் |
| FATHER NAME | ஐசக் |
| ADDRESS | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கோயம்புத்தூர். |
| AGE | 59 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.23.03.2026

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். கடந்த 19.05.2025 ல் எதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வு பலன் தள்ளிப் போடப்பட்டது மற்றும் அதற்கான தகுதியில்லா பணி நாட்கள் உள்ளது என்பதற்கான விவரத்தின் நகல் Ex R1.

குறுக்கு விசாரணை

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பயணசீட்டு பரிசோதகராக பணியாற்றி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். Ex P3 அடிப்படையில் தான் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரரை பயணசீட்டு பரிசோதகராக பணியமர்த்தினர் என்றால் சரிதான். நிறுவனம் 1 முதல் 49 தொழிலாளர்களுக்கு அதில் மனுதாரரும் அடங்குவார். பயணசீட்டு பரிசோதகருக்கு முதுநிலை ஓட்டுநரை விட ஊதியம் குறைவாக இருப்பதால் தமிழக அரசாங்கத்தின் போக்குவரத்துத் துறை அரசாணை G.O.Ms.No. 51, dated 14.03.2013 and G.O.Ms.No. 61, dated 30.04.2016 பிறப்பிக்கப்பட்டு பயணசீட்டு பரிசோதகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்றுநர் ஆகியோருக்கு ஊதிய உயர்வு வழங்கி உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். Ex P1 ன் படி G.O.Ms.No. 51, dated 14.03.2013 அடிப்படையில் பயணசீட்டு பரிசோதகருக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டதா

என்றால் வழங்கப்பட்டது. Ex P1 ஆவணத்தின் அடிப்படையில் 01.09.2010 தேதியில் இருந்து முன் தேதியிட்டு வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டது என்றால் ஓய்வுதிய பணபலன்கள் மட்டும் கொடுக்க வேண்டும் என்று உள்ளது. Ex P1 ஆவணத்தில் அந்த மாதிரி ஓய்வூதிய பணபலன்கள் மட்டும் தான் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பாக உள்ளதா என்றால் இல்லை. Ex P1 உத்தரவிலே Administration Pension Trust 01.09.2010 அல்லது அதற்கு பிறகு பணி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் பயணசீட்டு பரிசோதகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்றுநர் ஓய்வூதியத்தை மறுநிர்ணயம் செய்து அரசாணையின் படி உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரிதான். Ex P1 ன் படி பயணசீட்டு பரிசோதகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்றுநர் உடனடியாக ஊதிய உயர்வை 01.09.2010 முதல் மறுநிர்ணயம் செய்து உயர்த்தி வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர் என்றால்

சரிதான். Ex P1 ன் படி பயணசீட்டு பரிசோதகர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்றுநருக்கு சம்பளம் உயர்த்தி வழங்கவில்லை என்றால் 01.09.2016 முதல் ஊதியம் உயர்த்தி தந்துள்ளோம். 2013 முதல் 2016 வரை என்ன காரணத்திற்காக அரசாணையின் அடிப்படையில் ஊதிய வித்தியாச தொகை உயர்த்தி வழங்கவில்லை என்றால் அனைத்து போக்குவரத்து கழகத்திலும் ஊதிய வித்தியாச தொகை வழங்கபடாததால் எதிர்மனுதாரர் நிர்வாகமும் வழங்கவில்லை. இன்றைய தேதி வரைக்கும் அரசாணையை நடைமுறைபடுத்தவில்லை என்றால் சரிதான். கணக்கீட்டு மனுவில் மனுதாரர் கேட்டுள்ள ஊதிய வித்தியாச தொகை ரூ. 1,68,056/- வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல, Ex R1 ன் படி ரூ. 69270/- மட்டுமே வழங்கபட வேண்டும். Ex R1 கணக்கீட்டு விவரங்கள் G.Oன் படி கணக்கீடு செய்யவில்லை என்றால் சரிதான். 2010 செப்டம்பர் மாதத்தில் இருந்து மனுதாரருக்கு அடிப்படை சம்பளம் ரூ. 11665/-, Grade pay

ரூ. 4300, **VDA** ரூ. 7184/-, **HRA** ரூ. 1240/- ஆக மொத்த சம்பளம் ரூ. 24389/- வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் நான் ஆவணங்களை சரிபார்த்து தான் சொல்ல முடியும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.